## நோர்வேஜியக் கவிதைகள் இரண்டு

**மூலம் :** *தக்வம் மரிய*
**தமிழில் :** *பானுபாரதி*



# ஒரு பெண்ணின் பணி முடிகின்றது

*எனது*
*குழந்தைகள் எங்கே?*

*அழகாக ஆடையணிந்து*
*அந்நிய மனிதர்போல்*
*என்னிடம் வந்திருக்குமிவர்கள்*
*இன்று*
*தங்களது பெயர்களால் அழைக்கப்படுகிறார்கள்.*
*முன்பொருகால்*
*இவர்களது பிஞ்சுக்கரங்கள்*
*எனது*
*கழுத்தைக் கட்டிக்கொள்ள போட்டியிட்டன*
*குட்டி இதழ்களென்னை முத்தமிட*
*ஆவலாய்த் துடித்தன.*

*ஐந்து தடவைகள்,*
*ஒவ்வொரு தடவையும் ஒன்பது மாதங்கள்*
*குமட்டலும், வாந்தியுமாய் அவதிப்படுத்தியது.*
*சமையல்கட்டின் பல்வேறு வாசனைகள்*
*என்னை சூழ்ந்துகொண்டு அழுக்குரைத்தன.*
*கண்ணாடியில் தெறிக்குமென் உருவமோ*
*பொங்கிய, புளித்த மா போன்றிருக்கும்.*
*எனது முகம் வெளிறித் தெரிந்து*
*அடையாளம் தொலைந்து போனது.*

*ஓ கடவுளே........*
*படுக்கையறையிலும்*
*குழந்தைகள் பணியிலும்*
*எனது காலங்கள் கரைந்தனவே.*
*எனது இரத்தத்திலும் சதையிலுமிருந்து*
*ஐந்து உயிர்களை வெளியே தந்தேன்*
*இன்றோ*
*ஐந்து அந்நிய மனிதர்களை தரிசிக்கிறேன்.*

*ஒவ்வொரு பிரசவத்தின்போதும்*
*உடலம் தளர்ந்து*
*வலுவிழந்து போயினேன்.*
*எனது வயிறோ*
*ஒரு பை போன்று தொங்கியபடி*
*அடுத்த தடவைக்காக காத்திருந்தது*

*எனது மார்புகள்*
*பசித்த உதடுகளால் உறிஞ்சப்பட்டன.*
*முலைக்காம்புகள்*
*கடுத்த புதுப்பற்களால்*
*கடித்துக் கசிந்தன.*

*எனது மடி*
*அழுக்கான உடைகளுடனும்,*
*அழுகை நிறைந்த குழந்தைகளாலும்*
*நிரவிக் கிடந்தது.*

*எனது முகம்*
*அவர்களின்*
*முத்தங்களாலும் கண்ணீராலும்*
*ஈரம் காயாதிருந்தது.*

*எனது சர்வாங்கமும்*
*திருமணத்தினால் ஆக்கிரமிக்கப்பட்டுக் கிடந்தது.*

‘ஒரு பெண்ணின் பணி முடிகின்றது’ என்ற கவிதைக்கான ஓவியத்தை உயிர்நிழலுக்காக பிரத்தியேகமாக வரைந்து தந்த நோர்வேஜிய ஓவியர் கார்ல் யொகான்சன் *(Karl Johanson)* அவர்களுக்கு நன்றி !



தக்வம் மரிய

நோர்வேஜிய பெண்ணியக் கவிஞரான மரியே தக்வாம் *(Marie Takvam)* 1926ம் ஆண்டு டிசம்பர் மாதம் 6ம் திகதி நோர்வேயின் வடகிழக்குப் பகுதியில் ஓர்ஸ்தா என்னும் சிறு கிராமத்தில் பிறந்தவர். 1952இல் இவரது முதல் கவிதை வெளியீடான «ஏழு நட்சத்திரங்களின்கீழ் திருடுமுக்கு» பிரசுரமானது. 1952ம் ஆண்டிலிருந்து 1997ம் ஆண்டுகளுக்கிடையிலான காலப்பகுதியில் 13 கவிதைத் தொகுப்புகளையும், இரண்டு நாவல்களையும், சில நாடகப் பிரதிகளையும் படைத்துள்ளார். 97இற்கும் 81இற்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் நான்கு திரைப்படங்களிலும் நடித்துள்ளார். வாழ்க்கையோட்டம், காதல், மனிதப் பருவங்கள் போன்ற விடயங்களை தனது கவிதைகளின் கருப்பொருளாய்க் கொண்டிருந்தார். இவரது அநேகமான படைப்புக்கள் சமூகத்தைப் பற்றிய கடும் விமர்சனங்கள் கொண்டதாய் விளங்குகின்றன. பொதுவாக மரியாவின் எல்லாக் கவிதைகளும் வாழ்வுக்கும், மரணத்துக்குமிடையிலான போராட்டத்தை வெளிப்படுத்துகின்றன. 79வயதான கவிஞர் மரியே தக்வாம் தற்பொழுது ஒரு கிராமத்துக் கோடியில் இயற்கையோடு சேர்ந்து கவிதை படித்துக்கொண்டிருக்கிறார். இளவேனிற்காலம் இவருக்குப் பிடித்தது. வாழ்வின் தத்துவத்தை விளக்குவது இந்த இளவேனில் என்பது இவரது கவித்துவமான கருத்து.

# மீண்டுமொரு முறை

*மீண்டுமொரு முறை*
*ஒரு மனிதன்*
*எனக்குள் வந்தான்*
*எனது இரத்த நாளங்களுள்*
*இதழ்களின் வழியே*
*அணுசக்தியின் தெறிப்பாய்.*

*எனது கைகளும்*
*எனது விரல்களும்*
*இனி என்னுடையவையல்ல*
*அவைகள்*
*அரூபமான நூலிழையால்*
*எமக்கிடையில்*
*ஆளுகை செலுத்தப்பட்டன.*

*என்னுடைய பாதங்கள்*
*என் சிந்தனையின் பாதைவழியே*
*போகவில்லை.*
*எனது சிகையும்கூட*
*உனது விருப்பப்படியே கூட்டி*
*முடியப்பட்டுள்ளது.*

*ஒருபோதும், ஒருபோதும்*
*என்னால் என்னை*
*ஆளுமை செய்ய முடியவில்லை.*



ஓவியம் : ரஞ்சினி

*இதம் வேண்டி கரங்களைப் பற்ற*
*இன்னொரு முறை*
*நான் முனையும் போதெல்லாம்*
*மீண்டும் மீண்டும்*
*சிறைப்படுத்தப் படுகிறேன்.*

*நீ என்னருகில்*
*இல்லாத கணங்களிலும்கூட*
*எனது மூளைக்குள் குடிகொண்டு*
*உயிர்க்கலங்களை சிதைக்கின்றாய்,*
*உனது நாடகமேடையில்*
*நானொரு*
*பொம்மை மாத்திரமே.*